ஓம்.

தமிழில்

ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் ஸாராம்சங்க ளடங்கிய

துவாதசோபநிஷத்.

IV சுவேதாசுவதரோபநிஷத்.

N. S. ராஜாராமய்யரால்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

விலை ரூ 0 - 3 - 0

ஓம்.

ஓம் தத்ஸத்.

க்ருஷ்ண யஜுர்வேதீய

சுவேதாசுவதரோபநிஷத்.

சாந்தி.

எங்களைக் (சிஷியனையும், குருவையும்) காக்க. எங்களுக்குப் போஷணை தருக. எங்களுக்கு வித்யா விஷயத்தில் சாமர்த்தியந் தருக. தேஜஸ்விகளான எங்களால் பிரம்ம வித்யை அறியப்பட்டதாகுக. எங்களுக்குள் ஒருவருக்கொருவர் துவேஷமின்றி யிருக்கட்டும். சாந்தி. சாந்தி. சாந்தி.

ஸ்ரீசங்கர பாஷிய ப்ரதீகச் சுருக்கம்.— இந்த ஜீவன், சித்ஸதாநந் தாத்விதீய பிரம ஸ்வ ரூபமாக விருந்தபோதிலும், தன்னைச் சேர்ந்த (தனக்குபாதியான) அவித்யையினுல் எல்லா அநர்த்தங்களையு மடைந்து, அவித்யையினுல் கற்பிக்கப்பட்ட பல சாதனங்களால் இஷ்டா நிஷ்டங்களையும் பெற்று, மகாம் முதலியன போன்ற ராகாதிகளால் மோக்ஷமாகிற புருஷார்த்தத்தை யடைய வொட்டாது இங்குமங்கும் இழுக்கப்பட்டு, தேவ நரதிர்யகாதி அநேக ஜன்மங்களை எடுத்து, பிறகு, ஏதேனும் புண்ணிய வசத்தால் அந்தந்த ஜன்மதத்துக்குரிய கர்மானுஷ்டானங்களை ஈசுவரார்ப்பணமாகச் செய்து, அதனுல் ராகாதிகளைப் போக்கடித்தும், நித்தியா நித்திய வஸ்து விவேகத்தால் இகலோகப் பரலோகப் போகங்களை வெறுத்தும், குருபதேசத்தாலும் வேதாந்த சாஸ்திர சிரவணுதியினுலும், "நானே பிரம்மமா யிருக்கிறே" னென்ற தத்துவத்தை யறிந்து சோகத்தை விலக்குகிருன்.

இந்த ஸ்திதியே மோக்ஷம். அது வித்தையினுற்ருன் உண்டாக வேண்டியதாக விருக்கிறது. அதன் பொருட்டு உபநிஷத் சொல்லப்படுகிறது. அதை யறிந்தால் அமிருதத்துவம் — மோக்ஷம் சித்திக்கும். (அதற்கு அநேக சுருதி ஆதாரங்கள் கூறப்படுகின்றன). இவ்வாறு

அநேக சுருதிகளிருப்பதாலும் ஞானத்திற்கே மோக்ஷ சாதனத்துவமிருப்பதாலும் இந்த உபநிஷத்து ஞான விசாரணையிலே தொடங்குகின்றது.

மேலும் "உபநிஷத்" என்ற சப்தத்தினாலேயே, ஞானத்துக்கு மோக்ஷ சாதனத்துவம் பெறப்படுகிறது. யாங்ஙனமெனின், உப, நி, ஸத்; உப, நி, இரண்டும் உபஸர்க்கம்; ஸத் என்ற தாதுவுக்கு விசாணம் (பிளக்கிறது), கதி (செல்கிறது), அபஸாதனம் (போக்கடிக்கிறது) என்று பொருள். ஸம்ஸாரப் பீஜத்தைப் பிளப்பதனாலும், பிரமத்திடத்திற்குப் போகும்படி செய்வதாலும், கர்ப்ப ஜன்ம ஜரா மரணாதிகளைப் போக்கடிப்பதாலும், "உபநிஷத்" என்று சொல்லப்படும்.

ஞானம் மோக்ஷ சாதனமன்று, கர்மம் மோக்ஷ சாதனமாயிருக்கிறதென்று சொல்வோமாயின், அப்படியல்ல. அவ்வாறு கொள்வது சுருதிக்கும் நியாயத்திற்கும் விரோதமாயிருக்கிறது. (அங்ஙனம் விரோதமாயுள்ள பல சுருதிகள் இங்கெடுத்துதகரிக்கப்படுகிறது). எவ்விதம் நியாய விரோதமெனில், எது செய்யப்படுகிறதோ அது அநித்தியமானதால், கர்மம் அநித்தியம்; மோக்ஷம் கர்மத்தால் சாதிக்கப்படுகிறதாயிருப்பின் அப்பொழுது மோக்ஷம் அநித்தியமாகும்; மோக்ஷமோ நித்தியமானதால் நியாய விரோதமென்று சொல்லப்பட்டது. ஆயின், எப்பொழுது கர்மமானது, பலம் வேண்டப்படாமலே ஈசுவரார்ப்பணமாக அனுஷ்டிக்கப்படுகிறதோ அப்பொழுது அக்கர்மமானது, மோக்ஷத்திற்குச் சாதனமான ஞானத்திற்குச் சாதனமாகிய, அந்தக்கரண சுத்திக்குச் சாதனமாகி, இவ்விதத்திலே பரம்பரையாக மோக்ஷத்துக்குஞ் சாதனமாயிருக்கிறது. அந்தக்கரணஞ் சுத்தமானால் மோக்ஷம்; கர்மங்களால் அந்தக்கரணஞ் சுத்தப்படவேண்டும். இதற்கு அநேக சுருதி ஸ்மிருதிகள் பிரமாணமுள்ளன. (அவைகள் இங்கெடுத்துக் கூறப்படுகின்றன). கர்மங் கல்மஷ க்ஷயத்திற்கு ஹேதுவாயும், ஞானம் மோக்ஷத்திற்கு ஹேதுவாயுமிருக்கிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "குர்வந்நேவ" என்று தொடங்குஞ் சுருதியால் கர்மஞ் செய்யப்படவேண்டியதென்று ஏற்படுங்கால் எவ்விதம் ஞானம் மோக்ஷத்துக்குச் சாதனமாகுமெனில்:— அவ்விதியானது கர்மத்தில் அதிகாரமுள்ளவனுக்குச் சொல்லப்பட்டதேயன்றி ஞானிக்கன்று. மேலும் மேற்படி சுருதியினால், கர்மஞ் செய்யவேண்டுமென்ற நியமமுஞ் சொல்லப்பட்டதன்று. வித்யையின் மகாத்மியத்தைக் காட்டவேண்டியதன் பொருட்டு கர்மம் முதலில் எடுத்துப் பேசப்பட்டது. ஞானி அவன் உயிருள்ளவரை புண்ணிய பாபாதி எக்கர்மத்தைச் செய்தாலும், அது அவனை யாதுஞ் செய்ய வல்லதன்று.

அங்ஙனமே சூத்திரக்காரரும்:— ஞாநத்திற்கே மோக்ஷ சாதனத்வத்தைச் சாதித்துச், செய்கைத் தலைமை முதலிய ஸம்ஸார தர்மங்களில்லாமை பாபமில்லாமை, இவ்வித இயல்புகளுடைய ப்ரம்மத்தைக் குறித்து உபதேசிப்பதைக்கொண்டு, அந்தப் பிரமத்தை யறிவதற்குமுன் கர்மத்திற் கதிகார மிருப்பதாகவும், ஒன்றற்கொன்று விரோதமானதால், ஞானம் கர்மம் இரண்டுஞ் சேர்ந்திருத்தல் ஒவ்வாதென்றும், ஆனல் கர்மம், அறியவேண்டுமென்ற இச்சைக்குச் சாதனமாக விருக்கிறதென்றுங் காட்டி யிருக்கின்றார். ஆதல்பற்றி மோக்ஷத்திற்குச் சாதனம் ஞானமே என்க.

(ஆக்ஷேபம்):— பந்தம் (ஸம்ஸாரம்) அநித்யம். அதை நிவிர்த்திக்க ஞானம் வேண்டும். அந்த ஞானத்தால் மோக்ஷமுண்டென்று எவ்வாறு சொல்லக்கூடும். பிரபஞ்சம் நமக்கு ஸத்தியமாகத் தோன்றப்படுகிறதே, அதைப் பாதிக்க ஒன்றுமில்லையே?

(சமாதானம்) தோன்றப்படுகிற யாவும் ஸத்தியமென்பது நிச்சயமன்று. யாங்ஙனமெனின், ஒரே சந்திரன் பல ஜலாசயங்களில் பல சந்திரன்களாகத் தோன்றப்படினும் அந்தச் சந்திரன்கள் யாவும் அஸத்தியமாக எவ்வாறு கொள்ளப்படுகிறதோ, அவ்வாறு பிரபஞ்சமும் அஸத்தியம். அதற் கநேக சுருதி ஸ்மிருதி ஆதாரங்கள் உள்ளன. (அவைகள் விஸ்தாரமாக இங்கெடுத்துக் கூறப்படுகின்றன). ஆதல்பற்றிப் பிரமம் ஒன்றே ஸத்திய வஸ்துவென்றும், அது நிர்விசேஷம் என்றும் அறியவேண்டியது. அங்ஙனமாயின், ஸவிசேஷ பிரமத்தைப் பற்றி அநேக சுருதிகளில் ஏன் எடுத்தோதப்படுகிறதெனின், உபாஸநார்த்தங் கூறப்பட்டிருக்கின்றதே யன்றி வேறில்லை.

இவ்வாறு பல சுருதி ஸ்மிருதி யுக்தி அநுபவத்தினல் பிரபஞ்சத்திற்குப் பொய்மை யிருப்பதாலும், பிரபஞ்சத்தில் பதார்த்தங்களொன்றற் கொன்று விலக்ஷணங்களாகக் காணப்பட்டு பரஸ்பரம் அத்தியாஸம் தோற்றப்படுவதாலும், அமூர்த்தமான ஆகாசத்தில் அஃதோ ரிடமென்றும், கறுப்பாக விருக்கின்றதென்றும் அத்தியாஸங் காணப்படுவது போன்று ஆத்ம வஸ்துவுக்கும்,

அநாத்ம வஸ்துக்களுக்கும் பரஸ்பரம் அவ்விதந் தோற்றப்படுவதாலும், "நான் ஸ்தூலித்துப்போனேன், நான் இளைத்துப்போனேன்" என்று பேசுவதைக்கொண்டு தன்னைத் தேகமாக அத்தியாஸப் படுத்திக்கொள்ளுகிற அநுபவ மிருப்பதாலும், அந்த அத்தியாஸத்தை யொழிக்க ஞாநம் வேண்டுவ தவசியம். அந்த ஞாநம் உண்டாகும் பொருட்டு உபநிஷத் தொடங்கப்படுகிறது.

முதல் அத்தியாயம்.

1. ஓம். பிரமவாதிகள் சொல்லுகிறார்கள். (பிரமவாதிகள் ஓரிடங் கூடி, ஒருவருக்கொருவர் அடியிற் கண்டபடி பிரச்னம் செய்துகொண்டார்கள்). "இந்த ஜகத்திற்குக் காரணம், பிரமமா? (அல்லது இனிக் கூறப்போகுங் காலம் முதலியதா? அல்லது காரணமே இல்லையா? காரண மெப்படிப்பட்டது? அதாவது உபதானமா, நிமித்தமா? அல்லது இரண்டுமா?) நாம் எதினின்றும் உண்டானோம்? எதனால் பிழைத்திருக்கிறோம்? முடிவில் எதிலே பிரதிஷ்டை செய்யப்படுகிறோம்? சுக துக்கங்களுள் எதனால் ஏவப்பட்டிருக்கின்றோம்? பிரம வித்துக்களே! சொல்லுங்கள் என்று.

2. காலமா? (எல்லாவற்றினுடைய முடிவுக்கு ஏதுவாயிருக்கிறகாலமா?) சுபாவமா? (அக்நிக்கு உஷ்ணம்போல் பதார்த்தத்தின் தன்மையா?) நியதியா? (புண்ணிய பாப லக்ஷணமான கர்மமா?) அல்லது யதிர்ச்சையா? (அகஸ்மாத்தாக நடக்கிறதென்பதா?) அல்லது விக்ஞான மயனாயிருக்கிற ஜீவனா, காரணம்? என்று யோசிக்குங்கால், இவைகளுள் ஒன்றேனுங் காரணமன்று, இவைகள் யாவுஞ் சேர்ந்துங் காரணமன்று; ஜீவனுஞ் சுவதந்திரமில்லாதவனாயும், சுக துக்கங்களுக் குட்பட்டவனாயு மிருப்பதால் காரணமாகமாட்டான்.

3. பிரம வித்துக்கள், இவ்வாறு தியாந யோகத்தால் ஆலோசித்துப் பார்த்து, எவர் ஒருவராகவே யிருந்து, மேற்சொன்ன காலம் முதலியன வெல்லாக் காரணங்களையும் நடத்திவைக்கின்றனரோ, அந்தப் பரமாத்மாவினுடையதும், தன் குணங்களால் (காரிய பூதங்களான பிருதிவி முதலியவைகளால்) மறைக்கப்பட்டிருக்கிறதுமான சக்தியே காரணமென்று கண்டார்கள், (அறிந்தார்கள்).

4. (பிரமம் ஓர் சக்கரமாக வர்ணிக்கப்படுகிறது); (மாயை, பிரகிருதி, சக்தி, தமஸ், அவித்யை, சாயை, அக்ஞானம், அநிருதம்,

அவ்வியக்தம் முதலிய பெயர்களை யுடையதாய் யாவற்றிற்குங் காரணமாயும் ஆதாரமாயு மிராநின்ற மேற்படி ப்ரமாத்மாவி னுடைய சக்தியாகின்ற) ஓர் நேமி — அச்சையுடையது; (மேற்படி சத்தியின் சத்வ, ராஜஸ், தமஸ் என்ற) முக் குணங்களால் வளைக்கப்பட்ட குடமுள்ளது; பதினாறு (பூதங்கள் 5. அந்தக் கரண முள்பட இந்திரியங்கள் 11; ஆக 16 விகாரங்கள்; அல்லது உலகங்கள் 14; விராட் 1; சூத்தி ராத்மா 1; 16) காரியங்களாகின்ற முடிவுகளுடையது; (பிரத்யங்கள் – தோற்றங்கள், அபிப் பிராயங்கள் – ஆகின்ற) ஐம்பது ஆரங்களையுடையது. (அவைகள் இதனடியிற் கூறப்படும்). (பத்து இந்திரியங்கள்; அவைகளில் — பத்து விஷயங்கள். ஆக) இருபது பிரதி ஆரங்களையுடையது. (பிருதிவி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், மனஸ், புத்தி, அகங்காரம் ஆக 8 பிரகிருதிகள்; மேல் தோல், உள் தோல், மாம்ஸம், இரத்தம், ஊன் ஜலம், எலும்பு, அதற்குள்ளிருக்கிற மஜ்ஜை, சுக்கிலம் ஆக 8 தாதுக்கள்; அனிமா - சிறிதுத்தன்மை - மகிமா - பெரிதுத்தன்மை - கரிமா-கனத்தன்மை - லகிமா - இலகுத் தன்மை - பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆக 8 ஐசுவரியங்கள்; தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதர்மம், அக்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம், ஆக 8 பாவங்கள்; பிரமன், பிரஜாபதி, தேவ, கந்தர்வ, யக்ஷ, ராக்ஷஸ, பிதிரு, பிசாச ஆக 8 தேவர்கள்; தயை, க்ஷாந்தி (பொறுமை) அனஸூயை (பிறரிடம் அசூயைப்படாமலிருத்தல்) அசௌசம், அநாயாசம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்பிருஹா ஆக 8 குணங்கள்; ஆக) நாற்பத்தெட்டு பிரகிருதி முதலியவைகளாகிற வட்டைகளால் வளைக்கப்பட்டது; (நானாரூபமான காமியம், ஆசையென்ற) ஒரே கயிற்றை (சுற்றுப்பட்டையை) யுடையது; (தர்மம் அதர்மம், ஞானம் என்ற) மூன்று மார்க்கங்களையுடையது. (பாப புண்ணியமாகின்ற) இரண்டு நிமித்தம்; (தேகேந்திரியம் முதலான அநாத்மாக்க ளிடத்தில் ஆத்மாபிமானம் வைப்பது மோகம்) மோகமாகிற ஒரு பிரமணமுடையது (சுற்றுதலுடையது). (இப்படிப்பட்ட ஆத்ம சக்கரத்தைத் தியாநஞ் செய்கின்றோம்).

[மேற்கண்ட 50 பிரத்தியங்களாவன ; 5 விபரியயங்கள் வித்தியாஸ நினைப்புகள் ; தமஸ் ; மோகம் ; மஹா மோகம் ; தாமிசிரம் ; அந்த தாமிசிரம் ;

தமஸ், 8 விதம் ; ஷடி பிருதிவி முதலான இவற்றில் 8 பிரகிருதிகளிடத்தில், ஆத்ம பிரதீதி யுண்டாவது 8 வித தமஸ் ;

மோகம் 8 விதம். 8 ஐசுவரியங்களில் மோகம் வைப்பது.

மஹா மோகம் 10 விதம் ; காணப்பட்டது 5 ; கேட்கப்பட்டது 5 ; சப்தாதி விஷயங்கள் 10 ; இவற்றில் அபிநிவேசம், மஹா மோகம். தாமிசிரம் 18 விதம் ; மேற்கண்ட பல விஷயங்களுள் 8 ஐசுவரியங்களால் பிரயத்தனஞ் செய்து காரியஞ் சித்திக்காவிடில் அதனு லுண்டாகுங் கோபம் தாமிசிரம் ;

அந்தத் தாமிசிரமும் 18 விதம் ; மேற்கண்டபடி பிரயத்தனஞ் செய்து பலனுண்டாகி அதைப் புஜிக்கின்றபோது மரணகாலஞ் சமீபித்துவிட்டால் அப்பொழுது உண்டாகுஞ் சோகம், அந்தத் தாமிசிரம்.

28 சக்திகள் ; இந்திரியங்களுடைய பார்வை முதலான பாவ சக்திகள் 10 ; அந்தகம் முதலான அபாவச் சக்திகள் 10 ; அந்தக் கரணத்திற்குப் புருஷார்த்த யோக்கிதையுள்ள விருத்திகளுடைய வித்தியாஸத்தால் சக்திகள் 8 ; ஆக 28 சக்திகள்.

9 துஷ்டிகள் ; பிரகிருத்தியாதி 4 ; விஷயோபாமங்கள் 5. ஆக 9. அவைகளாவன:—

1. பிரகிருதி பரிஞான முண்டாகி நாம் கிருதார்த்தனுகி விட்டோமென்று நினைப்பது பிரகிருதி துஷ்டி.

2. ஆசிரமாதியைப் பெற்று சந்தோஷப்படுவது உபாதான துஷ்டி.

3. எப்போதேனும் முக்தி நமக்கு அவசியங் கிடைக்குமென்று சந்தோஷப்படுவது கால துஷ்டி.

4. பாக்கிய மின்றி ஒன்றுமில்லை, அதனுல் இவ்விடமே மோக்ஷமென்று சந்தோஷப்படுவது பாக்கிய துஷ்டி.

5. விஷயங்களைச் சம்பாதிப்பது அசக்கியம் ஆனதால் அதுவேண்டாமென்று ஒழிவடைவது ஒருவித துஷ்டி.

6. அவைகளைக் காப்பாற்றுவது வருத்தமென்று ஒழிவடைவது ஒருவித துஷ்டி.

7. அவைகட்குத் தோஷ மிருப்பதால் வேண்டாமென் றொழிவுறுவது ஒருவித திருப்தி.

8. அவை கிடைத்தால் மேன்மேலும் ஆசையைக் கொடுக்கின்றன; ஆதலால் அவைகளின் சங்கம் வேண்டாமென் றொழிவடைவது ஓர்வித திருப்தி.

9. அவைகளைச் சேர்ந்தால் பரஹிம்சாதி தோஷம் சம்பவிப்பதால் வேண்டாமென் றொழிவடைவது ஓர்வித திருப்தி ஆக 9.

எட்டு ஸித்திகள்:—

1. ஊஹம் என்பது உபதேச மின்றி ஜன்மாந்திர ஸம்ஸ்கார வசத்தால் உண்டாகுந் தத்துவ ஞானம்.

2. சப்தம் என்றது சாஸ்திர வாராய்ச்சி யின்றி கேள்வியினா லுண்டாகும் ஞானம்.

3. அத்தியயநம் சாஸ்திர வாராய்ச்சியினா லுண்டாகும் ஞானம்

4. அத்தியாத்மிக வருத்தத்தைச் சகிப்பதா லுண்டாகும் ஞானம்.

5. அதிபௌதிக வருத்தத்தைச் சகிப்பதா லுண்டாகும் ஞானம்.

6. அதிதைவிக வருத்தத்தைச் சகிப்பதா லுண்டாகும் ஞானம்.

7. சுகிருத் பிராப்தி, குருவை யடைவதா லுண்டாகும் ஞானம்

8. தானம், ஆசாரியருக் குரித்தான வஸ்து தானத்தினா லுண்டான ஞானம். ஆக 8 சித்திகள்;

ஆக 50 பிரத்தியயங்கள்.]

5. (பிரமம் ஓர் நதியாக வர்ணிக்கப்படுகின்றது), (5 ஞானேந்திரியங்களாகிற) ஐவகை ஜலங்களுள்ளது; ஐந்து காரணங்களாகிற (பஞ்ச பூதங்களால்) உக்கிரமாயும் வக்கிரமாயு மிருக்கின்றது. (பிராணன்களாகிற) ஐந்து அலைகளுள்ளது; (சக்ஷுராதி ஜன்யமாகிற) ஐந்து (புத்திகளுக்குக் காரணமாகிய மனஸை) மூலமாகவுடையது; (சப்தாதி விஷயங்களாகிற) ஐந்து சுழல்களுள்ளது; (கர்மம், ஜன்மம், ஜரை, வியாதி மரணமாகிற) ஐந்து (துக்கங்களாகிற) வேகமுடையது; (அவித்யை அஸ்மிதை, ராகம் த்வேஷம், அபிநிவேசம்) என்ற கிலேசங்களாகிற ஐந்து பர்வங்களுடையது. இப்படிப்பட்ட நதியை தியாநஞ் செய்கிறோம்.

6. யாவற்றிற்கும் ஜீவஸ்தானமாயும், லயஸ்தானமாயும், பெரிதாயு மிருக்கிற இந்தப் பிரம சக்கிரத்தில் ஜீவன் (தான் வேறென்றும், ஈசுவரன் வேறென்றும் பிரமித்துக்கொள்வதினுலும், அநாத்மாவாகிய தேகாதியைத் தானென்று நினைப்பதினுலேயும் தேவ மனுஷ்ய திரியக் முதலான பலவித யோநிகளில் ஜனித்தும், மரித்தும்) சுழலுகிறுன்; பிறகு பரமாத்மா தானென்று அறிவதினுல் மோக்ஷத்தை யடைகிறுன்.

7. (ஸபிரபஞ்சமாகப் பிரமஞ் சொல்லப்பட்டது; அதை யறிவதனுல் மோக்ஷஞ் சித்திக்குமாவென்ற ஆசங்கை நிகழ அப்படியில்லை என்று நிரூபிக்கப்படுகிறது). பிரமம், அநேக சுருதிகளால் உபதேசிக்கப்பட்ட உத்கிருஷ்டமான வஸ்து; அதிலே (போக்தா, போக்கியம், பிரேரிதா அல்லது விசுவன். தைஜஸன், பிராக்ஞன்) என்ற இம்மூன்றும் பிரதிஷ்டிதமாக விருகின்றன, (அத்தியாஸஞ் செய்யப்படுகின்றன). மேலும், அந்தப் பிரமம் அக்ஷர வஸ்து. (நாசமற்றது). பிரபஞ்சத்திற்கு உள்ளே யிருக்கிற அந்த வஸ்துவைப் பிரம வித்துக்கள் அறிந்து அதில் லீனர்களாகவும், அதிலேயே தியான பரர்களாகவும் இருந்து ஸம்ஸாரத்தி னின்று விடுபடுகிறுர்கள்.

8. (ஜீவேசுவரர்களுக்கு உண்மையில் பேத மிராவிடினும், வியவகார தசையில் பேதத்தை எடுத்து விளக்கி அங்ஙனம் அறிவதால் அமிருதத்துவம் உண்டாகிற தென்று காட்டப்படுகிறது). வியக்தம், (விகாரப்பட்ட காரியம்); அவியக்தம், (காரணம்); க்ஷரம், (நாசமடைகிறது); அக்ஷரம், (அவிநாசி); இவ்விரண்டுஞ் சேர்ந்த இந்தப் பிரபஞ்சத்தை, ஈசுவரன் (பரமாத்மா) பரிக்கிறுர், (தாங்குகிறுர்); அநீசன், (ஜீவனும்) தாங்குகிறுன்; ஆனுல் இந்த ஜீவன் அவித்யாதத்காரிய பூத தேஹேந்திரியாதிகளால் கட்டுப்படுகிறுன். (போக் திருத்வ பாவ மிருப்பதனுல்; பிறகு உபாதி ரஹிதமான பிரமமா யிருப்பதாகத் தானே யறிந்து எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகிறுன்).

9. (இன்னும் பேதங் காண்பிக்கப்படுகிறது). ஞ:, (ஈசுவரன்); அஞ்ஞ:, (ஜீவன்), இவ்விருவரும், பிறப்பு முதலானது

அற்றவர்கள். இன்னு மொருத்தி யிருக்கிருள். அவள் மாயை; அவளும் பிறப்பு முதலானதும் அற்றவள் தான்; போக்திரு போக்யார்த்தத்துடன் சேர்ந்தவள். இம்மூவரில் ஈசுவரன் அநந்த ராயும், (தேசகால வஸ்து இம் மூன்றுவித பேதங்களினல் பரிச் சேதமற்றவராயும்), விசுவ ரூபராயும், அகர்த்தவாயு மிருக்கிருர்; இவ்வாறு மூன்றையும் அறியும்பொழுது (ஸாதகன்) மோக்ஷத்தை யடைகிருன்.

10. (இப்பொழுது மாயைக்கும், ஈசுவரனுக்கும் பேதங் காண்பிக்கப்படுகிறது). பிரதானம் (மாயை) க்ஷரம், (நாசமடை யும்); ஹர: (அவித்யாதிகளை நசிக்கச் செய்கிறவர்) ஈசுவரன், அமிருதாக்ஷரன். இந்த ஏகனுயிருக்கிற ஈசுவரன் மாயையையும் ஜீவனையும் நடத்துகிருர். அப்படிப்பட்ட வஸ்துவை தியானிப்ப தினுலும், (நானே பிரமம் என்று) யோசிப்பதினுலும், அப்படி அடிக்கடி யறிவதினுலும் விசுவ ரூபமான மாயைக்கு நிவர்த்தி யுண்டாகி மோக்ஷங் கிடைக்கும்.

11. அத்தகைய தேவனை யறிந்தால் (அவித்யாதி) பாசங் கள் யாவும் அற்றுப்போகும்; அவித்யாதி கிலேசங்களுடன் (அவைகளின் காரியமான) ஜன்ம மிருத்யு முதலானவைகளும் நாசமுறும்; அந்தப் பரமேசுவரனை தியானஞ் செய்வதால், தேக மழிந்த பிறகு (அர்ச்சிராதி மார்க்கத்தின் வழியாய்) விராட் ஆகிற மூன்ருவது சுவ ரூபத்தை யடைந்து, எல்லா ஐசுவரியத் தையும் பெற்று, (அதாவது ஸ்வர்க்காதி போகங்களை யனுப வித்து, அங்கிருந்தபடியே அவைகளை யெல்லாம் ஒழித்து) ஆப்த காமனுய், கேவலமாய், (பூர்ணனந்த அத்துவிதீயமா யிருக்கிற பிரமமாகி) விடுகிருன்.

12. (எதனுல் பரம புருஷார்த்த முண்டாகிறதோ, அதனை இங்ஙனம் அறிக). இப்படிப்பட்ட கேவ லாத்மா, நித்தியமாக அறிதற்குரியது. தன் னுத்மாவிலேயே இருக்கிறது; அறிதற் குரியது இதைக்காட்டிலும் வேருென்று மில்லை; ஜீவன், ஜகத், ஈசுவரன் இம் மூன்றும் அறியப்படின் பிரமம் அறியப்படும்.

13. அரணிக் கட்டையி லிருக்கிற அக்நி எவ்வாறு காணப் படவில்லையோ, கடைந்த பிறகு எவ்வாறு காணப்படுகிறதோ, அப்படி ஆத்மா தன் தேகத்தில் தெரியவில்லை. தியானத்தால் கடைந்து பார்த்தால் புலப்படும்.

14, 15. (எப்படிக் கடைகிற தென்றால்,) தேகமாகிற கீழ் அரணியில் பிரணவமாகிற மேல் அரணியைக்கொண்டு, தியான மாகிற மத்தினல் கடைவாயாக. மறைந்திருக்கிற வெண்ணெ யாகிற தேவன் வெளிப்படுவான். (இன்னும் எப்படி யிருக்கிற தென்றால்), எள்ளுக்குள் எண்ணெய்போலும், தயிருக்குள் நெய் போலும், ஊற்றினுள் ஜலம்போலும், அரணிக்குள் அக்நி போலும் மறைந்திருக்கிறது. அதைச் சத்திய மார்க்கத்திலிருப்ப வன் தபசால் (தியானத்தால்) பார்க்கிறான்.

16. (எப்படிப் பார்க்கிறான் என்றால்), க்ஷீரத்தில் நெய் வியா பித்திருப்பதுபோல ஆத்மாவை ஸர்வ வியாபியாகவும், ஆத்ம வித்தையாகிற தபசுக்குக் காரணமாகவும், உபநிஷத்தினல் அறி யப்படும் வஸ்துவாகவு மறிகிறான்.

இரண்டாம் அத்தியாயம்.

1. (தியானத்திற்குச் சாதனம் அதாவது யோக விஷயங் கூறப்படுகிறது). சூரிய தேவரானவர் முதலில் (தியானாரம்பகாலத்தில்) மனதைப் பிரமத்தி னிடத்தில் பொருந்தச் செய்து, அக்நி ஜோதியைக் காட்டி, இந்தச் சரீரத்திலுள்ள புத்திகளை வெளிப் பட்ட விஷயங்களினின்று இழுத்து விடட்டும் (புத்தியை அடக் கட்டும்).

2. அப்படி சூரியனுடைய அனுக்கிரகம் இருக்கும்போது அடக்கப்பட்ட மனதால் நாம் பிரமப் பிராப்திக்குச் சக்தர்களாக ஆவோம்.

3. ஸவிதாவானவர், மனஸை அடைக்கி, மனஸ் முதலான காரணங்களைப் பிரம சுகத்தை யடையத்தக்கனவாகவும், திவ்ய மான பெருஞ் ஜோதியைப் பார்க்க ஸாமர்த்தியமுள்ளனவாகவுஞ் செய்யட்டும்.

4. எவர்கள் மனதையும், மற்றக் காரணங்களையும் அடக்கு கிறார்களோ அந்த விப்பிரர்கள், வியாபகராயும், பெரியவராயும், சர்வக்ஞராயு மிருக்கிற ஸவிதாவினுடைய தயவை முதலில் ஸம் பாதிக்கவேண்டும்.

5. பிரமம் உங்களைச் சேரட்டும்; நமஸ்காரங்களால் சுலோ கங்கள் வரட்டும். திவ்விய ஸ்தானத்திலிருக்கும் எல்லாப் பிரம புத்திரர்களும் இதைக் கேட்கட்டும்.

6. எதில் அக்நி கடையப்படுகிறதோ, எதில் வாயு அடக் கப்பட்டு சப்தங்கள் உரத்த குரலில் சொல்லப்படுகின்றனவோ, சந்திரன் எதில் அதிகரிக்கப்படுகிறதோ, அந்த யக்ஞ கர்மத்தில் மனது பிரவிர்த்திக்கிறது. (அதாவது போகத்துக்காக முதலில் மனஸ் கர்மத்திலே பிரவிர்த்திக்கிறது).

7. நீடித்திருக்கும் பிரமத்தை, சூரியனுடைய அனுக்கிரகத் தால் ஸேவிக்கவேண்டும். அந்தப் பிரமத்தினிடத்தில் நிஷ்டையை

அதாவது தியாநத்தைச் செய்யவேண்டும். அப்படி நீ செய்வாயாகில் பூர்வமா யிருக்கிற கர்மங்கள் உன்னைத் தொடமாட்டா.

8. மார்பு, கழுத்து, தலை இம் மூன்றுகளையும் உன்னதமாயுடைத்தாயிருக்கிறதுஞ் சமமா யிருக்கிறதுமான சரீரத்தை ஸ்தாபனஞ் செய்துகொண்டு இந்திரியங்களை ஹிருதயத்தில் மனஸினால் அடைக்கிப் பிரணவமென்ற தோணியினால் பயங்கரங்களான எல்லா ஸம்ஸார நதிகளையும் விவேகி கடக்கவேண்டும்.

9. விவேகியானவன், பிராண வாயுக்களை அடக்கிச் சரியான நடத்தையுள்ளவனாக (அதாவது மிதபோஜனம் முதலியனகைக்கொண்டவனாகப்) பிராண வாயு குறைந்தால் மூக்கினால் சுவாசம் விடுகிறவனாக, நழுவுத லற்றவனாக, துஷ்டக் குதிரைகளுள்ள ரதத்தைப்போல் இம்மனதைத் தரிக்கவேண்டும்.

10. ஸம பூமியிலும், சுத்தமான விடத்திலும், பொடிக்கல், மணல், அக்நி, சப்தம், ஜலம், கட்டிடம் இவைக ளில்லாத விடத்திலும் மனதிற்கு அனுகூலமும், பார்வைக்குப் பீடை யில்லாதும், ஏகாந்தமானதும், காற்றில்லா ததுமான இடங்களிலும் பரமாத்மாவின்மீது சித்தத்தைச் சேர்க்கவேண்டும்.

11. இவ்வாறு யோகஞ் செய்கிறவனுக்குப் பனி, புகை, சூரியன், வாயு, நெருப்பு, மின்மினிப்பூச்சி, மின்னல், ஸ்படிகம், சந்திரன் இவைகளுடைய ரூபங்கள் பிரமத்தைக் காட்டுவனபோன்று முதலில் பார்வைக்குப் புலப்படும்.

12. ஐந்து வகைப் பட்டதாகிய யோக குணம் பிரவிர்த்திக்குங்கால், பிரதிவி, அப், தேஜஸ், வாயு, ஆகாசம், இவைகள் வெளிப்படையாகும். அப்பொழுது அப்படிப்பட்ட யோகாக்னிமயமான சரீரத்தை யுடையவனுக்கு ரோகமும் இல்லை, ஜரையுமில்லை, துக்கமு மில்லை.

13. லகுவா யிருத்தல், ரோகமில்லாம லிருத்தல், ஆசையற்றிருத்தல், தேகம் வர்ணமுள்ளதா யிருத்தல், தொனி ரம்யமாயிருத்தல், சுகந்தமுடைமை சுபமா யிருத்தல், மூத்திர புரீஷம் அல்பமா யிருத்தல் இவற்றை முதலாவது யோகப் பிரவர்த்தியென்று கூறுகிறார்கள்.

14. தங்கம் அல்லது வெள்ளியால் செய்யப்பட்ட ஓர் பிம்பம் எப்படி முதலில் மண் முதலான பூச்சினலே மலினமாகவிருந்து பிறகு அக்கி முதலியவற்ருல் தேஜோமயமாயும், வெளுப்பாயும் விளங்குகிறதோ, அப்படி அந்த ஆத்ம தத்துவத்தைத் தேகியானவன் பார்த்து, ஏகனுகவும், கிருதார்த்தனுகவும், சோகமற்றவனுகவும் ஆகிருன்.

15. யோகி தன் ஆத்ம தத்துவத்தினல் பிரம தத்துவத்தைத் தீபத்தைத் தீபத்தாற்போல் எப்பொழுது பார்க்கிருனே, அப்பொழுது பிறப்பில்லாதவனுகவும், நித்தியனுகவும் ஸர்வ தத்துவங்களால் விசுத்தனுகவு மிருக்கிற தேவனை யறிந்து, ஸர்வ பாசங்களினின்றும் விடுபடுகிருன்.

16. இந்தத் தேவனே திக்கு, மூலை திக்கு; ஸர்வன், முன்னுண்டானவன்; கர்ப்பத்தி லிருக்கிறவன்; உண்டான சிசு; இனி ஜனிக்கப்போகிறவன், இங்ஙனமாக விருந்தபோதிலும், எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியேகமாகத் தனிப்பட்டு நிற்கிருன், எல்லாப் பிராணிகளுடைய முகமாகவு மிருக்கிருன்.

17. எந்தத் தேவன் அக்கியிலும், ஜலத்திலும், விசுவ புவனத்திலும், ஓஷதிகளிலும், விருக்ஷங்களிலு மிருக்கிருனே, அந்தத் தேவனை நமஸ்காரஞ் செய்கிறேன், நமஸ்காரஞ் செய்கிறேன்.

மூன்றும் அத்தியாயம்.

1. எவன் ஒருவனுகவே மாயாவியாகத் தன் சக்திகளி னுல் ஈசுவரத்தன்மை அடைந்திருக்கிருனே, எவன் ஒருவனுக, எல்லா ஜனங்களையும் உற்பத்திக் காலத்திலும், சக்தி யுண்டாகிற காலத்திலுந் தன் சக்திகளினுல் ஈசுவரனுக ஆளுகிருனே, அந் தத் தேவனை அறிகிறவர்கள் மரண மில்லாதவர்க ளாகிருர்கள்:

2. (எப்படி மாயாவி என்ருல்) யாது காரணமென்னின், ஓரே ருத்திரன்; ஞானிகள் அவனைத் தவிர இரண்டாவதாக ஒன்றை யும் பார்க்கவில்லை; எவன் தன் சக்திகளால் எல்லா ஜனங்களை யும் நியமனஞ் செய்கிருனே, அப்படிப்பட்டவனும், ஜனங்க ளுக்கு வேருனவனும், எல்லாப் புவனங்களையும் படைத்து, ரக்ஷித்து முடிவு காலத்தில் இழுத்துக்கொள்ளுகிறவனுயு மிருக் கிருன்:

3. எங்குங் கண்க ளுள்ளவராயும், எங்கும் முகமுள்ளவ ராயும், எங்குங் கைகளுள்ளவராயும், எங்கும் பாதங்களுள்ளவராயு மிருக்கிற ஓரே தேவன், பூமியையும், ஆகாசத்தையுஞ் சிருஷ்டித்து மனுஷியர்களைக் கைகளுடனும், பக்ஷிகளைச் சிறகுகளுடனுஞ் சேர்த்துவைத்தார். (அதாவது அததற்குத் தக்க சக்தியை உண் டாக்கினுர்).

4. எவர் தேவர்களுக்கு உத்பத்திக் காரணரா்யும், சக்தி யைக் கொடுக்கிறவராயும், விசுவத்தைப் பரிபாலிக்கிறவராயும், ருத்திரனுயும், சர்வக்ஞராயும் இருந்து பூர்வத்தில் ஹிரண்ய கர்ப்பரைப் படைத்தனரோ அவர் நம்மை நற்புத்தி யுடையவர்க ளாகச் செய்யட்டும்.

5. ஹே ருத்திர! கிரியிலிருந்து சுகத்தைப் பயக்கும் ஈச! யாதொரு உம்முடைய மங்களகரமாயும், கோரமில்லாததாயும், புண்ணியத்தைக் கொடுக்கிறதாயு மிருக்கிற தேக முண்டோ, அந்த அத்தியந்த மங்களகரமா யிருக்கிற தேகத்துடன் எங்களை நோக்குக, (கடாக்ஷம் செய்யும் — கிருபை செய்யும்).

6. மலையிலிருந்து நன்மை தருபவனே, மலையிலிருந்து காப்பவனே, எய்யும் பொருட்டு எந்தப் பாணத்தைக் கையில் தரித்துக்கொண்டிருக்கிறீரோ, அந்தப் பாணத்தை மங்களமாகச் செய்யும்; புருஷனையும் ஜகத்தையும் ஹிம்ஸிக்காமலிரும்.

7. பிரபஞ்சத்துக்கு வேறாயும், பிரம்னுக்கு வேறாயும், பெரிதாயும், சரீரந்தோறுஞ் சர்வ பூதங்களிடத்திலும் மறைந்திருக்கிறதாயும், பிரபஞ்சத்துக்கு ஒரே ஆவரண பூதமாயு மிருக்கிற அந்த ஈசனை யறிந்து அமிருதர்களாகிவிடுகிறார்கள். (இது காரணாத்மனவஸ்தானம்).

8. இந்தப் புருஷனை மகானாகவும், பிரகாச ரூபமுள்ளவனாகவும், அக்ஞானத்துக்குப் புறம்பா யிருக்கிறவனாகவும் நான் அறிகிறேன். அவரையே அறிந்து மிருத்தியுவைத் தாண்டுகிறான். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை.

9. எதைக் காட்டிலுஞ் சிரேஷ்ட வஸ்துவாவது, கீழ்ப்பட்ட வஸ்துவாவ தில்லையோ, எதைக் காட்டிலும் பெரிய வஸ்துவாவது சிறிதாவது இல்லையோ, எது விருக்ஷம்போல் ஆகாயத்தில் நிற்கிறதோ, அந்தப் புருஷனால் எல்லாம் நிறைந்திருக்கின்றன.

10. காரிய ரூபமா யிருக்கிற ஜகத்துக்கும், அதற்குக் காரண ரூபமா யிருக்கிற ஈசுவரனுக்கும் வேறாயிருக்கிறதும், ரூபரஹிதமாயும், தாபத்திரய ரஹிதமாயு மிருக்கிறது எதுவோ, அதை அறிந்தவர்கள் அமிருதர்கள். மற்றவர்கள் துக்கமாகிற ஸம்ஸாரத்துவத்தை யடைகிறார்கள்.

11. எல்லா முகங்களையும், தலைகளையும், கழுத்துக்களையும் உடையவராயும், எல்லாப் பிராணிகளுடைய புத்தியி லிருப்பவராயும், ஸர்வ வியாபியாயும், பகவானாயும், சிவ னிருக்கிறபடியால் அவரை சர்வகதனென்று சொல்லப்பட்டது. (பகவான் என்பதற்கு அர்த்தம்: — எல்லா ஐசுவரியத்தையும், வீரியத்தையும், யசஸையும், ஸ்ரீயையும், ஞானத்தையும், வைராக்கியத்தையும் உடையவர்).

12. (இன்னும் எப்படி யிருக்கிறாரென்றால்) மகான், ஸமர்த்தர் (உதய ஸ்திதி சம்ஹார விஷயத்தில்); அந்தக்கரணத்துக்குப் பிரவர்த்தகர்; ஸுநிர்மலமா யிருக்கிற பரமபதப் பிராப்தியைக் கொடுக்கிறவர்; பரிசுத்தர்; நாச மில்லாதவர்.

13. அங்குஷ்டப் பிரமாணமுள்ளவர் (அங்குஷ்டப் பிரமாணமுள்ள ஹ்ருதயத்தி லிருப்பதால் அவருக்கு அந்தப் பிரமாணஞ் சொல்லப்பட்டது); பூர்ணர்; யாவ ருள்ளத்து மிருப்பவர்; எப்பொழுதும் எல்லாருடைய ஹ்ருதயத்திலு மிருப்பவர்; ஹ்ருதயஸ்தமா*யிருக்கிற மனதால் மறைக்கப்பட்டவர்; ஞானேசன்; இவ்வாறாக எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் அமிருதர்கள்.

14. அநேக சிரஸுகளை யுடையவர், பூர்ணர், அநேக நேத்திரங்களை யுடையவர்; அநேக பாதங்களை யுடையவர்; புவனமனைத்தும் வியாபித்து பத்து அங்குலப் பரிமாணத்துக்கு மேலாக விருக்கிறார்; (அதாவது, எல்லாவற்றிலும் வியாபித்தும் எல்லாவற்றிற்கும் வேறாயு மிருக்கிறார்; அல்லது நாபிக்குப் பத்து அங்குலத்துக்கு மேலிருக்கிற ஹ்ருதயத்தி லிருக்கிறவர்).

15. எது அன்னத்தினால் கறைக்கப்படாம லிருக்கிறதோ, (அதாவது இப்போது காணப்படுகிறதோ), எது உண்டாயிற்றோ, எது உண்டாகப்போகிறதோ, அப்படிப்பட்ட இது வெல்லாம் இந்தப் புருஷன்தான். மோக்ஷத்துக்கு ஈசுவரன்.

16. எங்குங் கை காலுள்ளவர்; எங்குங் கண், தலை, முகமுள்ளவர்; எங்குங் காதுள்ளவர்; லோக முழுதுஞ் சூழ்ந்து கொண்டு நிற்கிறார்.

17. (இவரை) எல்லா இந்திரியங்களையும் பிரகாசப்படுத்துகிறவராகவும், எல்லா இந்திரிய மில்லாதவராகவும், யாவற்றிற்கும் பிரபுவாகவும், ஈசனாகவும், யாவற்றிற்கும் மேலான இடமாகவும், மகத்தான காரணமாகவும் (அறியவேண்டும்).

18. ஒன்பது துவாரமுள்ள பட்டணமாகிய தேகத்தில் தேகியாக (ஜீவாத்மாவாகவும்), ஸ்தாவர ஜங்கமாத்மகமா யிருக்கிற

எல்லா ஜகத்தையும் வசியப்படுத்துகிறவராகவும் இருந்துகொண்டு பரமாத்மா வெளியில் அசைகிருர்.

19. பாதமில்லை, விரைவாகச் செல்கிறவர்; கரங்க ளில்லை, கிரகிக்கக்கூடியவர்; கண்க ளில்லை, பார்க்கிறவர்; காதில்லை, கேட்கிறவர்; அறியவேண்டியதை அறிகிறவர்; இவரை அறிகிறவ னில்லை; இவரை முதலாவது மகா புருஷனுகச் சொல்லுகிருர்கள்.

20. அணுவைக் காட்டிலும் அணு; பெரிதைக் காட்டிலும் பெரிதாக இந்த ஜந்துவுடைய ஹ்ருதயத்தில் ஆத்மா இருக்கிருர்; இப்படிப்பட்ட விஷய போக சங்கற்ப ரஹிதராயும், மகானுயு மிருக்கிற ஈசனை, ஈசுவரனுடைய அனுக்கிரகத்தால், சோகமில் லாதவன் பார்க்கிருன்; (அதாவது ஒருவன் பார்த்தால் அவனுக் குச் சோகங் கிடையாது).

21. இவரை ஜரையில்லாதவரென்றும், புராதனரென்றும், சர்வாத்மாவென்றும், விபுத்துவத்தால் எங்கும் நிறைந்தவரென் றும், எவருக்கு உத்பத்தியும் அபாவமு மில்லையென்று பெரி யோர்கள் கூறுகிருர்களோ அவரென்றும், நித்தியரென்றும் நான் அறிகிறேன்.

நான்காம் அத்தியாயம்.

1. எவர், ஒருவரோ; ஜாதி முதலியன இல்லாதவரோ; அநேக சக்திகளின் சேர்க்கையால் அநேக ஜாதிகளைத் தனக்கு யாதொரு பிரயோஜன மில்லாமல், தரித்துகொள்ளுகிறாரோ, எவரிடத்தில் இந்தப் பிரபஞ்சமானது ஆதியிலும் (மத்தியிலும்) அந்தத்திலுஞ் சேருகிறதோ அந்தத் தேவர் நல்ல புத்தியோடு நம்மைச் சேர்த்துவைக்கட்டும்.

2. அதே அக்நி; அதே சூரியன்; அதே வாயு; அதே சந்திரன்; அதே சுக்கிரன் (முதலிய நக்ஷத்திரங்கள்); அதே பிரமம்; அதே ஜலம்; அதே பிரஜாபதி (பிரமன்).

3. நீயே, ஸ்திரீ; புருஷன்; குமாரன்; குமாரி; கிழவன் கழியால் வஞ்சிக்கிறாய்; பிறந்தவனாக விருக்கிறாய்; எங்கும் முக முள்ளவன்.

4. நீயே நீல பக்ஷி; மஞ்சள் பக்ஷி; செங்கண்ணுள்ள பக்ஷி; மேகம்; ருதுக்கள்; சமுத்திரங்கள்; அநாதியா யிருக்கிறதும், வியாபகனாக விருக்கிறதும், எதனிடத்தில் எல்லாப் புவனங்களும் உண்டாயிற்றோ, அதுவுமாக இருக்கிறாய்.

5. செம்மை, வெண்மை, கறுமை நிறமுள்ளவளாயும், (ராஜஸ, ஸத்வ, தமோகுண முள்ளவளாயும்), அநேக பிரஜைகளைச் சிருஷ்டித்தவளாயும், தனக்குச் சமான வடிவத்தை யுடையவளாயும், பிறக்காதவளாயு மிருக்கிற ஒருத்தியை (மாயையைப்) பிறக்காத ஒருவன் (ஜீவாத்மா) ஸேவித்துக்கொண்டும் (சொன்ன படி கேட்டுக்கொண்டும்) ஆசிரயித்துக்கொண்டு மிருக்கிறான். மற்றொரு பிறக்காதவன் (பரமாத்மா) போகத்தைப் புசித்த இவனை விட்டுவிடுகிறான்.

6. இரண்டு கருட பக்ஷிகள், சேர்க்கை யுள்ளவைகள், சிநேக முள்ளவைகள், (ஜீவன்; பரமாத்மா) ஒரே விருக்ஷத்தில் (சரீரத்தில்) ஆசிரயித்திருக்கின்றன; அவைகளில் ஒன்று (ஜீவன்) கர்ம

பலத்தை ருசியுடன் சாப்பிடுகிறது; மற்றொன்று (பரமாத்மா) சாப்பிடாமல் எங்கும் பார்த்துகொண்டிருக்கிறது.

7. ஒரே விருக்ஷத்திலே (சரீரத்திலே) போக்தாவாக இருக்கும் புருஷன் (ஜீவன்) முழுகுகிறவனாக, அக்ஞானத்தினாலே மோகம் பிடித்து துக்கப்படுகிறான்; அவன் எப்பொழுது கஷ்டப்பட்டு கண்டுபிடிக்கப்படும் வேறான ஈசனையும், (பரமாத்மாவையும்) (இந்த ஜகத்) அவனுடைய மகிமை யென்பதையுங் கண்டு கொள்ளுகிறானோ, அப்பொழுது துக்கமில்லாதவ னாகிறான்.

8. வேதங்களால் அறியப்படத்தக்கவரும், நாச மில்லாதவரும், உயர்ந்தவரும் ஆகாயம்போ லிருக்கிறவருமான யாதொருவரிடத்தில் எல்லாத் தேவர்களும் ஆசிரயித் திருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவரை அறியாதவன் வேதத்தினால் என்ன செய்யப்போகிறான்? அறிந்தவர்கள் கிருதார்த்தர்க ளாகிறார்கள்.

9. எதை வேதங்களென்றும், யக்ஞங்களென்றும், கிரதுக்களென்றும், விரதங்களென்றும், சென்றது, இருக்கிறது, இனி வரப்போகிறது, இவைகளென்றும் வேதங்கள் சொல்லுகின்றனவோ, (இது நிர்க்குண பிரமம்), மாயியான அவர் (மாயையில் சம்பந்தப்பட்ட ஈசுவரன்) இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தார். அந்தப் பிரபஞ்சத்தில் இன்னொருவன் (ஜீவன்) மாயையினால் கட்டுப்பட்டு, ஸம்ஸாரத்திலே திரிகிறான்.

10. பிரகிருதி யென்பது மாயை யென்றும், மாயையுள்ளவன் ஈசுவர னென்றும் அறியவேண்டும். அந்த ஈசுவரனுடைய அவயவ பூதங்களாகிற வஸ்துக்களால் இந்த ஜகத் நிறைந்திருக்கிறது.

11. எவர் மூலப் பிரகிருதி யாகிய மாயை யிடத்திலும், அந்த மாயையே பின்ன பின்ன பிரகிருதியா யிருக்கிற மாயை யிடத்திலும் இருக்கிறாரோ, ஒருவரோ, எவரிடத்தில் எல்லாம் லயத்தை அடைகின்றனவோ, முக்தியைக் கொடுக்கிறவராயும், ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டவராயும், தேவனாயு மிருக்கிற அந்த ஈசுவரனை நன்றாக விசாரித் தறிந்தவர்கள் மோக்ஷத்தை யடைகிறார்கள்.

12. எவர், தேவர்களுக்கு உத்பத்தி காரணராயும், சக்தியைக் கொடுக்கிறவராயும், விசுவத்தைப் பரிபாலிக்கிறவராயும், உருத்திரனும், சர்வஞ்ஞராயும் இருந்து பூர்வத்தில் ஹிரண்ணிய கர்ப்பரை உண்டுபண்ணினரோ, அவர் நல்ல புத்தியோடு நம்மைச் சேர்த்துவைக்கட்டும்.

13. எவர் தேவர்களுக்கு அதிபதியோ, எவரிடத்தில் பிரஜைகள் ஆசிரயத்திருக்கிறார்களோ, இரண்டு கால் பிராணிகளுக் நாற்கால் பிராணிகளுக்கும் எவர் ஈசனோ அந்தத் தேவரை ல் பூஜிக்கிறோம்.

14. மாயையால் மறைக்கப்பட்டு ஒன்றுந் தெரியாம லிருக்கிற இந்த ஜகத் மத்தியில் சூக்ஷ்மத்திலுஞ் சூக்ஷமராயும், விசுவத்தைச் சிருஷ்டித்தவராயும், அநேக ரூபங்களை யுடையவராயும், விசுவத்தை ஒரே சுற்றாகச் சுற்றிக்கொண் டிருக்கிறவராயு முள்ள சிவனை யறிந்த ஒருவன் மோக்ஷத்தை யடைகிறான்.

15. அவரே எக்காலத்திலும் இந்தப் புவனத்துக்கு ரக்ஷகர்; விசுவத்துக்கு அதிபதி; எல்லாப் பூதங்களிலும் மறைந்திருக்கிறவர்; எவரிடத்தில் ரிஷிகளும், தேவர்களும் மனதை நாட்டி சேர்ந்திருக்கிறார்களோ, அவரையே அறிந்து மிருத்தியு பாசத்தை பேதிக்கிறான்.

16. நெய்யின் ஸாரம்போல் அதி சூக்ஷ்மமாயும், சிவனும், எல்லாப் பூதங்களிலும் மறைந்திருக்கிறவராயும், விசுவத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறவராயும் உள்ள தேவனை யறிந்து, எல்லாப் பாசங்களிலிருந்தும் விடுதலையாகிறான்.

17. இவர் விசுவத்தைச் சிருஷ்டித்தவர்; மகாத்மா; எப்பொழுதும் ஜனங்களுடைய ஹ்ருதயத்தி லிருப்பவர்; ஹ்ருதயத்தாலும், விவேக புத்தியாலும், மனதாகிற ஞானத்தினாலேயும் அறியத்தகுந்தவர்; இவரை அறிந்தவர்கள் அமிருதர்க ளாகிறார்கள்.

18. எப்பொழுது அக்ஞானம் நீங்குகிறதோ, அப்பொழுது பகலு மில்லை, இராத்திரியு மில்லை, இருக்கிற தென்பது

மில்லை, இல்லை யென்பது மில்லை; சிவன் மட்டுந்தான் நிற்கும்; அது நாசமற்றது; சூரியனால் புகழத்தகுந்தது. அதே நித்திய மாயும் அநாதி சித்தமாயுமுள்ள ஞானம்;

19. இவரை உயரத்திலாவது, பக்கத்திலாவது, மத்தியி லாவது, திக்குகளில் ஒருவருங் கிரகிக்க முடியாது; இவருக்குச் சமானமான வஸ்து இல்லை. இவர் பெயர் மகத்தா யிருக்கிற கீர்த்திதான்.

20. இவருடைய ரூபம், இந்திரியங்களுக்குக் கே[illegible] லாமல் நிற்கிறது; எவனும் இவரைக் கண் முதலான [illegible] களினால் அறியமாட்டான். ஹ்ருதய குகையிலிருக்கிற இவரைச சுத்த புத்தியினாலும், மனதினாலும் அறிந்தவர்கள் அமிருதர்க ளாகிவிடுகிறார்கள்.

21. (பிரார்த்தனை) நீ, இறப்பு பிறப்பு இல்லாதவன்; ஆன தால் ஸம்ஸாரத்தினின்றும் பயமடைந்த ஒருவன் உன்னைச் சரண மென்றடைகிறான். ஹே, உருத்திர! உன்னுடைய தக்ஷிண முகத்தால் என்னைக் காப்பாற்று.

22. எங்களுடைய புத்திரர், பௌத்திரர், ஆயுசு, கோக்கள், அசுவங்கள், வீரர்களா யிருக்கிற வேலைக்காரர்கள், இவர்களிடத் தில் ஹே, உருத்திர! நீர் நாசத்தைச் செய்யவேண்டாம்; கோபங் கொண்டு கஷ்டப்படுத்த வேண்டாம்; ஏனென்றால் இந்த ஸதஸில் ஹவிஸுடன் கூட உம்மை யழைக்கிறோம்.

ஐந்தாம் அத்தியாயம்.

1. நாசமற்றதாயும், பிரம பரமாயும், அநந்தமாயும் இருப்பவை யிரண்டு; வித்தை யொன்று; அவித்தை யொன்று; இந்த இரண்டும் எதனிடத்தில் மறைவாக வைக்கப்பட்டிருக்கிறதோ, இவைகளில் அவித்தை நாச ஹேது; வித்தை மோக்ஷ ஹேது; இந்த இரண்டையும் எவர் நியமனஞ்செய்கிறாரோ அவர் அந்நியர் (பரமாத்மா).

2. எவர் ஸ்தானந்தோறும், சகல ரூபங்களிடத்திலும், எல்லாம் உண்டாகிற விடத்திலும் இருக்கிறாரோ; சர்வக்ஞராயும், முதலில் தானே யுண்டானவராயும் இருக்கிறாரோ, அவர் பிரமனை ஞானங்களுடன் சேர்த்தார்; உண்டானவராகப் பார்த்தார் (முதலில் பிரமாவை உண்டுபண்ணினார்).

3. மாயாத்மகமா யிருக்கிற இந்தப் பிரபஞ்சத்தில் ஒவ்வொரு சிருஷ்டிக் கூட்டத்தையும், நானாப்பிரகாரமாகச் செய்து மறுபடியுஞ் ஸம்ஹரிக்கிறார்; மறுபடியும் மரீசி முதலான பதிகளைச் சிருஷ்டித்து, ஸர்வாதிபத்யஞ் செய்கிறார்.

4. சூரியனைப்போல், மேல், கீழ், குறுக்கு, முதலான திக்குகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு விளங்குகிறார்; இந்தப்படிப் பகவான், வரேண்யர், தேவர், ஏகர் தன்னுடைய ஆத்ம பூதமாயிருக்கிற எல்லாவற்றிலு மிருக்கின்றார்.

5. எவர் ஒவ்வொன்றுக்குமுள்ள சுவ பாவத்தைப் பக்குவப்படுத்துகிறாரோ, பக்குவப்படும்படியான எல்லாவற்றையும் விகாரப்படுத்துகிறாரோ, மூன்று குணங்களை ஏற்படுத்துகிறாரோ, அவர் ஏகர். விசுவத்திலிருக்கிறார்.

6. உபநிஷதங்களிலே மறைந்திருக்கிற அந்தப் பிரமத்தை எந்தப் பிரமன் அறிந்தாரோ, அவரும், எந்தத் தேவர்கள், ரிஷிகள் அறிந்தார்களோ, அவர்களும் அதே மயமாய் அமிருதர்களாகிவிட்டார்கள்.

7. (ஜீவாத்மா) குணத்தோடு கூடினவர், பலத்துக்கும், கர்மத்துக்குங் கர்த்தா; செய்யப்பட்ட கர்மத்தின் பலனை அனுபவிக்கிறவர்; விசுவரூபர்; முக்குண முள்ளவர்; மூன்று வழி யுள்ளவர்; (தேவ யானம், பிதிரு யானம், தூமாதி மார்க்கம்); பஞ்ச பிராணனுக் கதிகாரி; தன்னுடைய சுவ கர்மங்களுடன் சஞ்சரிக்கிறார்.

8. அங்குஷ்ட மாத்திரர்; சூரியனுக்குச் சமான ரூப முள்ளவர்; சங்கல்பம் அகங்காரம் இவைகளுடன் கூடினவர்; புத்தியின் குணத்தோடும், தன் சொந்தமான (ஜாதி) குணத்தோடுஞ் சேர்ந்தவர்; தார்க்கழியின் நுணி ஆணியைப்போல் சிறிதாக இருந்தாலும் வேறாகமட்டுந் தோற்றப்படுகிறார். (பரமாத் மாத்மாவுக்கு அவர் வேறில்லை).

9. ஒரு வாளுடைய நுணியை நூறு பாகஞ்செய்து, அதில் ஒரு பாகத்தை நூறு பாகஞ் செய்யின், அதில் ஒரு பாகம் ஜீவன்; (அதாவது பரமாத்மாவின் அநேக அம்சங்களில் ஒரு அம்சம் ஜீவன்). ஞானமுடையவன், நாசமில்லாதவன்.

10. இவன் (ஜீவாத்மா) ஸ்திரீயு மல்ல; புருஷனு மல்ல; நபும்ஸகனு மல்ல; எந்தெந்தச் சரீரத்தை எடுக்கிறானோ அதனால் ரக்ஷிக்கப்படுகிறான்.

11. சங்கற்பம்; பிறகு த்வக் இந்திரிய வியாபாரம்; பிறகு பார்வை; பிறகு ஆசை; இவைகளால் (கர்மங்கள் செய்யப்படுகின்றன); அந்தந்த கர்மங்களுக்குத் தக்கபடி ரூபங்கள், அந்தந்த ஸ்தானம், யோனி இவைகளை மனுஷியன் அடைகிறான். போஜனம், பானம், மழை இவைகளினால் சரீரம் விருத்தியை அடைவதுபோல்.

12. தேஹியானவன் (ஜீவாத்மா) ஸ்தூல, சூக்ஷ்மங்களாயிருக்கிற அநேக ரூபங்களைத் தன் குணங்களால் (விகித, பிரதிஷித்த விஷயானு குணங்களால்) சுற்றிக்கொண் டிருக்கிறான். அந்தக் கிரியைக்குத் தக்க குணங்களாலும், ஆத்ம குணங்களாலும் அந்தந்த ரூபங்களுக்குச் சேர்த்துவைக்கிற காரணமாயும், பரனுக்கு வேறானவனாயுங் காணப்படுகிறான்.

13. கஹனமுள்ள ஸம்ஸாரத்தின் நடுவிலே, ஆதி, அந்தம் இல்லாதவனும், விசுவத்துக்குச் சிருஷ்டி கர்த்தாவாயும், அநேக ரூபங்களை யுடையவனையும், விசுவத்தை ஒரே சுற்றாகச் சுற்றிக் கொண் டிருக்கிறவராயு மிருக்கிற தேவனை அறிந்து, ஸர்வ பாசங்களினின்றும் விடுபடுகிறான் (ஜீவன்).

14. சுத்தமான அந்தக்காணத்தால் கிரகிக்கப்படத் தக்கவராயும், அசரீரியென்று பெயருள்ளவராயும், பாவத்தையும் அபாவத்தையும் உண்டுபண்ணுகிறவராயும், சிவனையும், (சுத்தராயும்), கலைகளைச் சிருஷ்டித்தவராயு மிருக்கிற தேவனை யார் அறிவார்களோ அவர்கள் தேகத்தைத் தியஜிக்கிறார்கள்.

ஆறும் அத்தியாயம்.

1. கலங்கிய அறிவுடையவராகிச் சில பண்டிதர்கள் (இந்த உலகத்தின் தோற்றத்திற்குக் காரணம்) இயற்கைதானென்றும், வேறு சிலர் காலமே (காரணம்) என்றுஞ் சொல்லுகிறார்கள். உலகத்தில் ஈசனுடைய மஹிமையாலேதான் இந்தப் பிரம சக்கரம் * சுழலுகின்றது.

2. நித்தியமாக இவ்வுலகனைத்தையுஞ் சூழ்ந்திருப்பவன், அறிஞன், காலத்திற்குக் காலமாக இருப்போன், (எல்லாக்) குணங்களு முடையோன், எல்லா முணர்ந்தவன், — இவனது ஆணையின்படி இங்கு மண், நீர், தீ, காற்று, வெளி, எனக் கருதப்படுஞ் சிருஷ்டி (யனைத்தும்) சுழன்றுகொண்டிருக்கிறது.

3. அத்தொழிலைச் செய்து (இவ்வுலகத்தைப் படைத்து), பின் மீண்டும் ஆலோசிப்பவனாகித் தத்துவத்தை (ஆத்ம தத்துவத்தைத்) தத்துவத்துடன் (பிரகிருதி தத்துவங்களுடன்) சேர்ப்பிக்கிறான். அதாவது, ஒன்றோடும், இரண்டோடும், மூன்றோடும், எட்டோடும் (இவ்வெண்ணுள்ள தத்துவங்களுடனும்) காலத்தோடும், ஸூக்ஷ்ம மாகிய ஆத்ம குணங்களோடும் (சேர்ப்பிக்கின்றான்).

4. குணங்களுடன் சேர்ந்த கர்மங்களைப் (படைப்புத் தொழில்களைச்) செய்து, எவன் அவற்றில் அவற்றின் தன்மைகளை ஏற்படுத்துகிறானோ, அவன் (அந்த ஈசன்) அவையில்லாதபோது, அத் தொழில்கள் அழிந்துவிட்ட காலத்தில், தொழில் நீங்கியவனாய், (பிரகிருதி) தத்துவங்களினின்றும் பிரிந்து நிற்கின்றான்.

5. அவன் ஆதி, எல்லா ஸம்யோக (புணர்ப்பு) நிமித்தங்களுக்கும் ஹேதுவாவோன். முக்காலங்களுக்கும் மேற்பட்டவன். கால மில்லாதவனாகவுங் காணப்பட்டவன். அகில ரூப

---

* முதல் அத்தியாயம் 4-ம் மந்திரத்தைக் காண்க.

னும், ஜகத்தாகியவனும், ஸ்வ சித்தத்தி லுள்ளவனும், பூர்வனு மாகிய அந்தத் தேவனை உபாஸனை செய்து,

6. அவன் விருக்ஷம் (ஜகத்), காலம், இவற்றின் அளவுகளுக்கு அப்பா லுள்ளவன், அவற்றினின்றும் வேறானவன், அவனால் இந் தப்பிரபஞ்சம் சுழன்றுகொண்டிருக்கிறது. தர்மத்தை வஹிப்பவ னும், பாபத்தை அழிக்கின்றவனும், ஜகத்தின் தலைவனும், ஆத் மாவி லுள்ளவனும், அமிருதனும், அனைத்தையுந் தரிப்பவனும் (ஆகிய அந்த ஈசனை) உணர்ந்து;

7. ஈசுவரர்களிலே உயர்ந்தவனாகிய மஹேசுவரன், தேவ தைகளிலே உயர்ந்த தேவதை, தலைவர்களிலே தலைவன், உயர்ந் தனவற்றிலெல்லாம் உயர்ந்தவன், புவனேசன், வணங்குதற்குரிய வன், அவனை அறிகின்றோம்.

8. அவனுக் காரியமுமில்லை, காரணமுமில்லை. அவனுக்கு ஒப்புயர்வு காணப்படுகின்றதில்லை. இவனது சக்தியை உயர்ந்த தென்றும், பலவிதமானதென்றுங் கேள்வி யுறுகின்றோம். (இந் தச் சக்தி) இயற்கை வடிவானது, ஞானம், பலம், தொழில் (எனு மிவையாக நிற்பது).

9. அவனுக்கு உலகத்தில் யாருந் தலைவனில்லை; அவனுக் கோர் இறைவனில்லை; அவனுக்கோர் குறியுமில்லை; அவன் (எல் லாவற்றிற்கும்) காரணம்; காரணதிபர்களின் தலைவன்; அவனைப் பிறப்பித்தவனும், அவனுக் கதிபனும் வேறில்லை.

10. ஏகனாகிய தேவன், சிலந்திப் பூச்சியைப்போலத் தனது இயல்பினின்றும், பிரகிருதியிற் பிறந்த நூல்களால் தன்னை மூடிக் கொள்ளுகிறவன், இவன் நமக்கு அழிவற்ற பிரம நிலையைத் தருக.

11. ஒருவனாகிய தேவன், எல்லா வஸ்துக்களி லும் மறைந்து நிற்பவன், எதிலும் நிறைந்தவன், எல்லாப் பூதங்களுக்கும் அந்த ராத்மா, கர்மங்களுக் கெல்லாந் தலைவன், எல்லாப் பொருள்களி னிடத்தும் இருப்பவன், ஸாக்ஷி, அறிவானவன், குண மில்லாத வன்;

12. செய்கையற்றிருக்கும் பல ஸாங்கிய சாஸ்திரப்படி பிரகிருதிக்கே தொழில் விகாரங்களுண்டு, ஜீவர்களுக் கில்லை. ஜீவர்களுக் கிடையே தானொருவனே தன் வசமுடையவனாக இருப்பவன், தான் ஒரே விதையாக இருந்து, பலவிதமானவற்றைச் செய்பவன், ஆத்மாவினிட மிருப்பவன், அவனை எந்தத் தீரர்கள் அறிகிறார்களோ, அவர்களுக்கே சாசுவதமான ஆநந்த முண்டு, மற்றவர்களுக் கில்லை.

13 நித்தியர்களுக்குள்ளே நித்தியன், சேதனர்களுக்குள்ளே சேதனன், தான் ஒருவனாக இருந்து பலவற்றின் விருப்பங்களை ஆக்குபவன், ஸாங்கிய யோகத்தா லறியத்தக்கவன், அந்தக் காரணனாகிய தேவனை அறிந்தோன் எல்லாத் தளைகளினின்றும் விடுபடுகின்றான்.

14. அங்கு (அவனிடத்திலே) சூரியன் பிரகாசிப்பதில்லை. சந்திரனும் நக்ஷத்திரங்களும் பிரகாசிப்பதில்லை. இந்த மின்னல்கள் ஒளி வீசுவதில்லை. இந்த அக்கினி (பௌதிக அக்கினி) எவ்விதம் ஒளிதரும்? அவன் ஒளி தருவதனையே எல்லாம் பின்பற்றி ஒளிர்கின்றன. அவனது ஒளியினால் இவை யனைத்தும் விளங்குகின்றது.

15. அவன் இந்தப் புவனத்தி னிடையே ஒரே (ஹம்ஸ: அவித்யை அழிப்பவன்) ஹம்ஸமாக நிற்பவன், அவனே தண்ணீரி னுள்ளே புகுந்திருக்குந் தீயாகுபவன், அவனை அறிந்துதான் ஒருவன் மரணத்தைக் கடத்தல் வேண்டும். (மோக்ஷம்) செல்லுவதற்கு வழியில்லை.

16. அவன் அனைத்தையுஞ் செய்தவன், அனைத்தையும் அறிந்தவன், தன்னைத்தானே பிறப்பித்தோன், (பிறப்பில்லாதவன்), அறிஞன், காலத்திற்குக் காலன், (எல்லா) குணங்களுமுடையவன், ஸர்வத்தையு முணர்ந்தோன், பிரதானத்திற்கும் (பிரகிருதிக்கும்) ஜீவர்களுக்கும் பதியாவோன், ஸம்ஸாரத்தின் மோக்ஷம், ஸ்திதி, பந்தம், இவற்றிற்கு ஹேதுவாக இருப்பவன்.

17. தன்மயன், அமிருதன், ஈசனாக நன்கு நிலைபெற்றவன், அறிஞன், எங்கு மிருப்பவன், இவ் வுலகத்தை ரக்ஷிப்பவன்,

அவனே இவ் வுலகத்திற்கு நித்தியத் தலைவன். அவனல்லாது வேறொரு ஹேதுவிருந்து ஆட்சி புரிவதில்லை.

18. எவன் பூர்வத்தில் (சிருஷ்டியின் தொடக்கத்தில்) பிரமனைப் படைத்து, அப் பிரமனுக்கு வேதங்களைக் கொடுத்தவனோ, ஆத்ம ஞானத்தைப் பிரகாசமுறச் செய்யும் அந்தத் தேவனை, மோக்ஷத்தில் விருப்பமுடைய நான் சரணமடைகிறேன்.

19. அமிசங்க ளில்லாதவனை, செய்கை யில்லாதவனை, சாந்தனை, பழிப்பில்லாதவனை, மாசற்றவனை, அமிருதத்தின் உயர்ந்த அணையை, நன்கு கொளுத்துண்ட விறகிலுள்ள நெருப்புப்போன்றவனை, (நான் சரணமடைகின்றேன்).

20. எப்போது மனிதர் ஆகாயத்தைத் தோல்போல மடிக்க வல்லவ ராவார்களோ, அப்போது அந்த (ஆத்ம) தேவனை அறியாமல் துக்கத்தின் முடிவுண்டாகும். (ஆத்ம ஞான மின்றி துக்க நிவிருத்தி ஏற்படுதல் அசம்பாவித மென்பது கருத்து).

21. மிகுந்த பரிசுத்த முடையதும், ரிஷி கணங்களுக்கு உரியதும் ஆகிய பிரம வித்தையைத் தவப் பெருமையாலும், ஈசனருளாலும் அறிந்த சுவேதாசுவதரன், நான்கு ஆசிரமங்களையுங் கடந்த மேலோருக்கு நன்கு எடுத்துக் கூறினன்.

22. வேதாந்தத்திலே பரம ரஹஸ்யமானதும், முன் கலப்பத்திலே ஆராய்ச்சி செய்யப்பட்டதும் ஆகிய இந்தப் பிரமவித்தையை மன ஒடுக்க மில்லாதவனுக்கும், புத்திர னில்லாத சிஷ்யனுக்குங் கொடுக்க லாகாது.

23. எவனுக்கு ஈசனிடத்திலே மிகுந்த பக்தி யுளதோ, ஈசனிடத்துள்ளது போலவே, குருவினிடத்தும் பக்தி யிருக்கின்றதோ, அந்த மஹாத்மாவினிடம் இந்த அர்த்தங்கள் கூறுமிடத்துப் பிரகாசமடைகின்றன. அந்த மஹாத்மாவினிடம் பிரகாசமடைகின்றன.

சுவேதாசுவதரோபநிஷத் முற்றிற்று.